# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 95/2016/பேரூ–2

ஆணை எண்: 212/2017

நாள்: 24/08/2017

திரு. M.R. நடராஜன்,
13வது வார்டு செயலாளர்,
மல்லூர் பேரூர் கழகம்,
மல்லூர், சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

திரு. கு. அய்யனார்,
பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத்தலைவர்,
மல்லூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம் – 636 203. – எதிர் மனுதாரர்

## ஆணை

சேலம் மாவட்டம், மல்லூர் பேரூராட்சி, 13வது வார்டு செயலாளர் திரு. M.R. நடராஜன், என பெயரிடப்பட்ட 21.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.886/2016/இ–2 நாள்:04.02.2016ன் வாயிலாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டு 12.02.2016 அன்று பெறப்பட்டு 95/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

சேலம் மாவட்டம், மல்லூர் பேரூராட்சியைச், சேர்ந்த திரு. M.R. நடராஜன், மல்லூர் பேரூராட்சி, அ.இ. அ.தி.மு.க. 13வது வார்டு செயலாளர் என்பவரது பெயரிட்ட லெட்டர் பேடில் மல்லூர் பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் திரு. கு. அய்யனார் மீது கீழ்க்கண்ட புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. பேரூராட்சியின் முன்னாள் துணைத்தலைவர் வார்டு உறுப்பினர்களை திட்டுவது, உள்ளாட்சி பணிகளில் அவர்கள் செயல்படாதவாறு தடுப்பது, திருவிழா காலங்களில் பொதுமக்கள், வியாபாரிகள், மில் அதிபர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் முறைகேடாக பணம் பெறுவது, 15 வார்டுகளில் பாதிக்குமேல் முறையாக அனுமதி பெறாமல் பணம் பெற்றுக்

கொண்டு குடிநீர் இணைப்பு வழங்குவது போன்ற பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அலுவலக நேரங்களைத் தவிர பிற நேரங்களிலும் பேரூராட்சி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.

இம்முறையீடு குறித்து இம்மன்றத்தின் 15.02.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரி பெறப்பட்டது. 06.05.2016 நாளிட்ட தனது அறிக்கையில், பேரூராட்சி செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு விளக்கங்கள் அளித்துள்ளார்:-

"...மனுதாரரை நேரில் 18.03.2016ஆம் தேதியில் விசாரணை மேற்கொண்ட பொழுது மனுதாரர் திரு. எம். ஆர். நடராஜன், 13வது வார்டு, மல்லூர் என்பவர், மனுவில் தெரிவிக்கப்பட்ட புகார்களுக்கும் தனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், தனக்கு வேண்டாத நபர்கள் யாரோ தன் பெயரை பயன்படுத்தி புகார் மனு கொடுத்துள்ளார்கள் என தெரிவித்துள்ளார். தான் எந்தவிதமான புகார் மனுவும் கொடுக்கவில்லை, என்றும் இந்த புகார் மனு முற்றிலும் பொய்யான புகார் மனு எனவும், அதில் உள்ளது தனது கையொப்பம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே, 21.01.2016 நாளிட்ட மனுதாரரின் புகார் மனுவானது நேரடி விசாரணையில் பொய்யான புகார் மனு என அறியப்பட்டுள்ளது..." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் 31.05.2016 நாளிட்ட தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு கூடுதல் விளக்கம் அளித்துள்ளார்:-

"...பேரூராட்சி அலுவலகம் எந்த நேரத்திலும் திறந்து இருப்பதில்லை. அலுவலக உதவியாளரால் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரமான காலை 9.30 முதல் மாலை 6.00 மணி முடிய மட்டுமே திறந்துள்ளது என்பதையும் மற்ற நேரத்தில் திறக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பேரூராட்சியின் பகுதியில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகள் அனைத்தும் பொதுமக்களின் விண்ணப்பங்கள் பெற்று உரிய விதிமுறைகளின்படி குடிநீர் இணைப்பு கட்டணம், சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் செண்டேஜ் கட்டணம் ஆகிய கட்டணங்கள் பெற்று குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும், மேற்படி புகார் மனுவானது உள்ளூரில் உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக அனுப்பப்பட்டுள்ளது..." எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரரிடம் இம்முறைமன்ற 18.05.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் புகார் மனுவின் உண்மை தன்மை குறித்து கேட்கப்பட்டது. மனுதாரர் தனது நாளிட்டபடாத 27.8.2016 அன்று வரப்பெற்ற கடிதத்தில் மேற்படி புகாருக்கும் தனக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை எனவும் வேண்டாதவர்கள் கொடுத்த புகார் எனவும் தெரிவித்துள்ளார்.

இம்முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவ 10.08.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் தல ஆய்வு அறிக்கையும் கோரிப் பெறப்பட்டது. 23.09.2016 நாளிட்ட தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கீழ்க்கண்டவாறு விபரங்களை சமர்ப்பித்துள்ளார்:-

".....மனுதாரர் திரு. எம். ஆர். நடராஜன் என்பவரது, மல்லூர் பேரூராட்சியின் துணைத் தலைவர் திரு.கே. அய்யனார் என்பவர் மீது தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து 23.09.2016 தேதி பகல் 2.30 மணி அளவில் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் மல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தனக்கு பேரூராட்சி துணைத் தலைவர் மீது மனக்கசப்பு எதுவும் இல்லை என்றும் திரு. கே. அய்யானருக்கு வேண்டாதவர்கள் யாரோ என் பெயரை தவறாக பயன்படுத்தி புகார் தெரிவித்துள்ளார்கள் எனத் தெரிவித்தார். இந்த புகாருக்கும் தனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் மேலும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும் தெரிவித்தார். தன் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் வேண்டாதவர்கள் தெரிவித்த புகார் எனத் தெரிவித்துள்ளார். இவற்றின் அடிப்படையில், திரு. எம். ஆர். நடராஜன் என்பவரது பெயரில் அளிக்கப்பட்ட புகார் மனு போலியானது எனத் தெரியவருவதால் இப்புகார் மனுவின் மீது நடவடிக்கை ஏதுமின்றி முடித்துவைக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும்..." தெரிவித்துள்ளார்.

மேலும் 13.01.2017 நாளிட்ட தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரிடம் 27.12.2016ல் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளதாகவும் அதில் மனுதாரர், முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்படவில்லை என்றும் அதிலுள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும் தெரிவித்துள்ளதாகவும், எதிர் மனுதாரர் குறித்தான புகார்கள் பொய்யானவை எனவும் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புகார் மனு போலியானது எனத் தெரியவருவதால் நடவடிக்கை ஏதுமின்றி முடித்துவைக்குமாறும் உதவி இயக்குநர் தனது குறிப்பான பரிந்துரையினை சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் மல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விசாரணை/விளக்க அறிக்கையை மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது ஆய்வறிக்கையினையும் ஏற்று போலியான புகார் மனு என்று இம்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

1. திரு. M.R. நடராஜன்,
அ.இ.அ.தி.மு.க. 13வது வார்டு செயலாளர்,
மல்லூர் பேரூர் கழகம்,
மல்லூர், சேலம் மாவட்டம்–636 203.

2. செயல் அலுவலர்,
மல்லூர் முதல்நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்–636 203.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியரகம், சேலம்.